# தேவாலய தாக்குதல் குறித்து பாப்பரசர் அதிர்ச்சி

விலை ரூபா 5. 00

ஈழநாடு

EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 37 திருவள்ளுவர் ஆண்டு 2026 ஆனி 29 இதழ் 159
யாழ்ப்பாணம் வியாழக்கிழமை 13 – 7 – 1995

(ரோம்)

நவாலி சென்பீற்றர்ஸ்தேவாலயம் மீது புக்காரா விமானம் மேற்கொண்ட கொடூர தாக்குதலில் அப்பாவிப் பொதுமக்கள் கொல்லப்பட்டது குறித்து பாப்பரசர் இரண்டாவது அருளப்பர் சின்னப்பர் அதிர்ச்சி தெரிவித்துள்ளார்.

இத்தாக்குதல் குறித்து ஜனாதிபதி சந்திரிகாவுக்கு யாழ் ஆயர் வண. தோமஸ் சௌந்தரநாயகம் கண்டன அறிக்கை ஒன்றை அனுப்பியுள்ளார்.

அந்த அறிக்கையின் பிரதி பாப்பரசருக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

(5ம் பக்கம் பார்க்க)

## நேற்று முன்தினம் மட்டும் 11 படையினர் பலி

(கொழும்பு)

வட்டுக்கோட்டை, சங்கானை பகுதிகளில் கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற மோதல்களில் மொத்தம் பதினொரு இராணுவத்தினர் கொலலப்பட்டதாக இராணுவதலைமையகம் நேற்றுத் தெரிவித்தது.

நேற்று முன்தினம் மாலை சுணவி பகுதிக்கருகில் படையினருக்கும் விடுதலைப்புலிகளுக்குமிடையே கடும்மோதல் நடந்ததாகவும் அச்செய்தி தெரிவித்தது.

இதே வேளை வலிகாமம் இராணுவ நடவடிக்கையில் கடந்த ஞாயிறு, திங்கள், செவ்வாய் ஆகிய மூன்று தினங்களிலும் மொத்தம் 18 படையினர்

(5ம பக்கம் பார்க்க)

# ★ டாங்கிகள் சகிதம் நேற்று
# ஆனையிறவிலிருந்து படையினர்
# முன்னேறும் முயற்சி முறியடிப்பு

## பலத்த இழப்புடன் படை பின் வாங்கியது

(யாழ்ப்பாணம்)

**ஆனையிறவுப் பகுதியில் இராணுவத்தினர் பல டாங்கிகள் சகிதம் மேற்கொண்ட பெரியதொரு முன்னேற்ற நடவடிக்கை நேற்று விடுதலைப் புலிகளால் முறியடிக்கப்பட்டது.**

நேற்றுக்காலை ஆனையிறவில் தென்பகுதியிலுள்ள தட்டுவன் கொட்டியை நோக்கி நான்கு டாங்கிகள் சகிதம் இராணுவத்தினர் முன்னேற்ற முயற்சியில் ஈடுபட்டனர்.

விடுதலைப்புலிகள் மூன்று மணிநேரம் நடாத்திய உக்கிர தாக்குதலையடுத்து இராணுவம் தனது நிலைக்கு பின்வாங்கியது. இராணுவ தரப்பில் சிப்பாய் ஒருவர் காலை இழந்ததுடன் மேலும் பல சேதங்கள் இராணுவத்துக்கு ஏற்பட்டுள்ளன. -சி

## படையினரின் முன்னேற்ற முயற்சி தொடர்ந்தும் முறியடிப்பு

[யாழ்ப்பாணம்]

வட்டுக்கோட்டைப் பகுதியிலிருந்து முன்னேற படையினர் மேற்கொண்டு வரும் முயற்சிகளை விடுதலைப் புலிகள் தொடர்ந்தும் தடுத்து நிறுத்தி தாக்குதல் நடாத்தி வருகின்றனர்.

வட்டுக்கோட்டைப் பகுதியில் நேற்றுக்காலை முதல் தொடர்ச்சியாக துப்பாக்கிச் சண்டை நடந்தவண்ணமிருந்தது. படையினர் பலத்த ஷெல் தாக்குதலை நடாத்திய வண்ணமிருந்தனர்.

வட்டுக்கோட்டைப் பகுதியிலிருந்து படையினர் பெருமெடுப்பில் முன்னேறும் முயற்சியை மேற்கொண்டு வருகின்றனர். எனினும் விடுதலைப் புலிகளின் கடும் தாக்குதல் அவர்களின் முன்னேற்ற முயற்சியை தடுத்து நிறுத்தி

(6-ம் பக்கம் பார்க்க)

## 'முன்னேற்ற பாய்ச்சல்' தாக்குதலில் 15,000க்கும் மேற்பட்ட துருப்புகள்

[கொழும்பு]

வலிமேற்கு பகுதியில் தற்போது மேற்கொள்ளப்பட்டு வரும் ஒபரேஷன் முன்னேற்ற பாய்ச்சலில்15 000 ற்கும்மேற்பட்ட துருப்பினர் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

பலாலி முகாமிலும் காரைநகர் கடற்படைத் தளத்திலும் தீவுப்பகுதியிலும் குவிக்கப்பட்ட மேற்படிபடையினர் இந்த இராணுவ நடவடிக்கையில ஈடுபடுத்தப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

யாழ்ப்பாணத்தை கைப்பற்றும் முயற்சியாகவே இத்தாக்குதல் நடைபெறுவதாகவும் எனினும் புலிகள் மிகக்கடுமையான எதிர்த்தாக்குதலை மேற்கொண்டு வருவதாக கொழும்பில் இராணுவ அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். சி

## பேராசிரியர் குணரத்தினம் தலைமையில் பிரஜைகள் குழு அமைப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் பேராசிரியர் க. குணரத்தினம் தலைமையில் பிரஜைகள்குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

குடாநாட்டில் ஏற்பட்டுள்ள நிலைமைகள் தொடர்பாக நான்காம் குறுக்குத்தெருவில் இயங்கிவரும் நற்சமூக ஒன்றியத்தில் ஆராய்வதற்காக கூடிய பொதுமக்களில் இருந்தே, சமூகத்தின் சகல தரப்பினரையும் பிரதி பலிக்கக் கூடிய வகையில் இப்பிரஜைகள் குழு தெரிவுசெய்யப்பட்டது.

இதன் உபதலைவராக பட்டயக் கணக்காளர் திரு. க. செல்வேந்திராவும், செயலாளராக கொக்குவில் இந்துக் கல்லூரி அதிபர் திரு. இ. மகேந்திரனும் தெரிவு செய்

(6ம் பக்கம் பாக்க)

## இராணுவ நடவடிக்கை தொடருமாம்

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாவில் தற்போது மேற்கொள்ளப்பட்டுவரும் இராணுவ நடவடிக்கை தொடர்ந்தும் நடைபெறுமென இராணுவ பேச்சாளர் பிரிகேடியர் சரத் முனசிங்கா தெரிவித்துள்ளார்.

படையினர் தமது இலக்கை அடையும் வரை இந்த 'முன்னேற்றப் பாய்ச்சல்' இராணுவ நடவடிக்கை தொடர்ந்தும் நடைபெறுமென்றும் அவர் தெரிவித்தார்.

இப்படை நடவடிக்கை

(6ம் பக்கம் பார்க்க)

## புக்காரா தாக்குதல் இளைஞன் பலி

(யாழ்ப்பாணம்)

வட்டுக்கோட்டை சங்கரத்தைப் பகுதியில் நேற்று நண்பகல் இடம்பெற்ற புக்காரா விமானத் தாக்குதலில் ஒருவர் உயிரிழந்தார். இருவர் படுகாயமடைந்தனர்.

நண்பகல் 11 45 மணிக்கு வலிகாமம் மேற்குப்பகுதியை நோக்கி விரைந்த புக்காரா விமானம், சங்கரத்தை வயல் வெளிப் பகுதியில் வந்து கொண்டிருந்தவர்களை நோக்கி

(6ம் பக்கம் பார்க்க)

## ஷெல் வீச்சுக்கு வயோதிபர் பலி!

(யாழ்ப்பாணம்)

வலி வடக்கு பகுதியை நோக்கி நேற்றுக்காலை படையினர் மேற்கொண்ட பலத்த ஷெல் தாக்குதலினால் ஒருவர் உயிரிழந்தார். மூவர் படுகாயமடைந்தனர்.

மனிப்பாயில் வீழ்ந்து வெடித்த ஷெல்லினால் எம். சரவணமுத்து வயது 60, என்பவர் உயிரிழந்தார்.

இத்தாக்குதலினால் தில்லையாத்தி வயது 43, சுழிபுரம்,

(5ம் பக்கம் பார்க்க)

## அகதிகள் தொகை தினமும் அதிகரிப்பு

(யாழ்ப்பாணம்)

வலிகாமம், மேற்கு, வடக்கு பகுதிகளில் கடந்த நான்கு நாட்களாகஇடம்பெற்றுவரும் இராணுவ தொடர் நடவடிக்கை காரணமாக இடம்பெயரும் அகதிகளின் எண்ணிக்கை நாளுக்குநாள் அதிகரித்துக்கொண்டே இருக்கின்றது.

மேலும் அகதிகளுக்கென ஒழுங்கு செய்யப்பட்ட இடங்களிலும் அகதிகள் நிரம்பிவழிவதாலும், அதிகரித்துவரும் அகதிகளின் எண்ணிக்கை அதிகமாகவும் இருப்பதால் அகதிகள் இன்னமும் நிலைகொள்ள இடமின்றி அலைந்துகொண்டே இருப்பதை அவதானிக்கக்

(5-ம் பக்கம் பார்க்க)

# பொதுமக்கள் மீதான தாக்குதல் உடன் நிறுத்தப்பட வேண்டும்

## ஐ. சி. ஆர். சி. ஜெனிவாவில் அறிக்கை

(ஜெனிவா)

பொதுமக்களின் உயிர், உடைமைகள் மீதான தாக்குதலையும் அவர்கள் தங்கியிருக்கும் அகதிமுகாம் தாக்கப்படுவதையும் உடன் நிறுத்துமாறு சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் கோரியுள்ளது.

''இடம்பெயர்ந்தபொதுமக்கள் விமானத் தாக்குதலில் கொல்லப்பட்டார்கள்'' என சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் ஜெனிவாவில் வெளியிட்ட செய்திக் குறிப்பிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அச்செய்திக்குறிப்பில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:

யூலை9ந் திகதிமுதல் இலங்கை இராணுவத்தினர் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள யாழ்ப்பாணப் பகுதிகளில் மிகப்பெரும் இராணுவ நடவடிக்கையை மேற்கொண்டுள்ளனர். இந்தத தாக்குதலில் மிகப்பெரும் ஆட்லறி ஷெல் தாக்குதலும், விமானத் தாக்குதல்களும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இதையடுத்து உடனடியாக வேபல்லாயிரக்கணக்கான மக்கள் அப்பகுதியிலிருந்து வெளியேறியுள்ளனர். வெளியேறியவர்களில் பெரும்பாலானோர் கோவில்களிலும் தேவாலயங்களிலும் தஞ்சமடைந்துள்ளனர். இவர்களில் நூற்றுக் கணக்கானோர் நவாலி சென் பீற்றேஸ் தேவாலயத்திலும் அதனைச் சுற்றியுள்ள பகுதியிலும் தஞ்சமடைந்தனர்: 9-ந் திகதி மாலை 4-30 மணியளவில் இந்தத் தேவாலயமும் அதனைச் சுற்றியுள்ள குடியிருப்புக்களும் விமானத் தாக்குதலுக்கு இலக்கானதை நேரில் கண்டவர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்த விமானத் தாக்குதலினால் பெண்கள், சிறுவர்கள் உட்பட 65பொதுமக்கள்கொல்லப்பட்டதுடன் 150 பேர் படுகாயமடைந்தனர் அன்று மாலையும் இரவும் இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க ஊழியர்கள் காயப்பட்ட பெருமளவு மக்களை அப்பகுதியிலிருந்து மீட்டு யாழ். போதனா வைத்தியசாலைக்கு அம்புலன்ஸ் மூலம் எடுத்துச் சென்றனர்.

இச்சம்பவம் நடைபெற்ற இடத்துக்கு மறுநாள் காலை நேரில் சென்ற சர்வதேச செஞ்சிலுவைச்சங்கக் குழுவினர் அவலம் நிறைந்த சம்பவத்தையும் பெருமளவு அங்கு இடம் பெற்ற சேதத்தையும் மதிப்பிட்டுள்ளனர். அப்பகுதியிலிருந்து இன்னமும் பெருமளவு சடலங்கள் மீட்கப்படவில்லை.

அப்பாவிப் பொதுமக்களுக்கு எதிரான இந்த தாக்குதலை அடுத்து ஆழ்ந்தகவலை கொண்டிருப்பதுடன் பொதுமக்களின் உயிரையும் உடலையையும் அவர்கள் அகதிகளாகத் தங்கியிருக்கும் இடங்களையும் மதித்து நடக்குமாறு கேட்டுக்கொண்டது.

இதேவேளை யாழ்ப்பாண போதனா வைத்தியசாலையைச் சுற்றியுள்ள பாதுகாப்பு வலயத்தையும் மருத்துவ வசதிகளையும்பாதிக்கச்செய்வதை தடுக்குமாறும்கேட்டுள்ள[illegible] ர-சி

## வரி விளம்பரம்

### புலமைப் பரிசில்

ஆண்டு-5 புலமைப் பரிசில் தேர்வுக்கான வினப் பத்திரம் 1, வினப் பத்திரம் 2க்குரிய ''பொது விவேகம், பொதறிவு'' வெளிவந்துவிட்டது. வெளியீடு: சுப்பிரமணிய புத்தகசாலை, யாழ்ப்பாணம். எ-5077

### சனீஸ்வர மாற்றம்

உங்களுக்கு எப்படி? அத்துடன் ''விண்ணில் வியாழமாற்றம் மண்ணில் உங்கள் யோக பலன்'' ஆண்டு 5 புலமைப் பரிசில் சித்திக்கு 'மொழித்திறன்' எங்கும் விற்பனையாகிறது. சோதிடர் V. A. சிவராசா 152 B, அரசடி வீதி, கந்தர் மடம். (சி-1551)

### சேவை

போட்டோ ஸ்ரட் - 5/- (காகிதாதிகள்தனி) பெருப்பித்தும் (205%) சிறுப்பித்தும் (48%) கொடுக்கப்படும். 100 ரோணியோ 19/- இரு பக்கம் 29/- ஸ்ரென்சில்-10/- ரைப்பிங் தமிழ் - 7/- ஆங்கிலம் - 8/50. யாழ். மருந்தகம், 470 (250) ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (எ 5075

# குடும்பத்தவர்களை தவறவிட்டு அலைந்து திரியும் உறவினர்கள்

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் பகுதியில் இடம்பெயர்ந்த மக்களில் பலர் தமது குடும்பத்தவர்கள் மற்றும் உறவினர்களை தவறவிட்டு யாழ். நகரப் பகுதியில் நிர்க்கதியான நிலையில் அலைந்து திரிகின்றனர்.

சிலர் பாடசாலைகளில் அமைக்கப்பட்டிருக்கும் இடம் பெயர்ந்தோர் முகாம்களுக்கு சென்று குடும்பத்தவர்களையும் உறவினர்களையும் தேடி வருகின்றனர்.

இராணுவத்தினர் வலி மேற்கு, வடக்கு பகுதிகளை நோக்கி ஷெல், விமானக் குண்டு வீச்சு தாக்குதலை மேற்கொண்டதை தொடர்ந்து மக்கள் நாலா பக்கமும் சிதறி ஓடினார்கள். இதனால் பிள்ளைகள் தமது பெற்றோர்களையும் பலர் தமது உறவினர்களையும் தவற விட்டுள்ளனர். 170- சி

## இலங்கை வங்கி ஊழியருக்கு

[யாழ்ப்பாணம்[

யாழ். ஸ்ரான்லி வீதியில் அமைந்துள்ள இலங்கை வங்கி இரண்டாவது கிளையிலும், சுன்னாகம், மானிப்பாய், காங்கேசன்துறைக் கிளைகளிலும் கடமையாற்றும் முகாமையாளர்கள், அதிகாரம்பெற்ற உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் ஆகியோரை இன்று வியாழக்கிழமை காலை 10-00 மணிக்கு இலங்கை வங்கி, மாவட்டக் காரியாலயத்திற்கு சமூகமளிக்குமாறு மாவட்ட முகாமையாளர் கோரியுள்ளார். [சி[

## அனுருத்தவின் விஜயத்திற்கு தென் பகுதியில் முக்கியத்துவம்

(கொழும்பு)

வடபகுதிக்கு விஜயம்செய்த பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் கேணல் அனுருத்த ரத்வத்த, மற்றும் உயர் இராணுவ அதிகாரிகளின் விஜயத்தை நேற்றைய தென பகுதி பத்திரிகைகள் முக்கியத்துவம் கொடுத்து செய்தி வெளியிட்டுள்ளன.

சிங்கள முன்னணி பத்திரிகைகள் படங்களுடன் முன் பக்க செய்தியாக இதனை வெளியிட்டுள்ளன.

பிரதிப்பாதுகாப்பு அமைச்சர் வடபகுதி யுத்த நிலைமையை நேரில் அவதானிப்பதற்காக அப்பகுதிக்கு உயர் இராணுவ அதிகாரிகளுடன் நேற்று முன்தினம் விஜயம் மேற்கொண்டமை தெரிந்ததே. (க-கி)

# தெற்கில் குண்டுவெடிப்பு அச்சத்தால் பெருமளவு தமிழர்கள் கைது

(கொழும்பு)

வடபகுதியில் மேற்கொள்ளப்படும் இராணுவநடவடிக்கையால் கொழும்பில் குண்டுகள் வெடிக்கலாம் என அரசு உயர் மட்டத்தில் அஞ்சுவதாக கொழும்பு பத்திரிகைகள் தெரிவித்துள்ளன.

இதனையடுத்து நூற்றுக் கணக்கில் தமிழ் இளைஞர்கள் கொழும்பு மற்றும் தென் பகுதியில் முக்கிய இடங்களில் மீண்டும் கைது செய்யப்படுவதாக அப்பத்திரிகைகள் தெரிவித்துள்ளன.

மேலும் சந்தேகத்திற்கிடமான வாகனங்கள் நுணுக்கமாகபடையினரால் சோதனையிடப்பட்டுவருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

கொழும்பு மற்றும் கேந்திர முக்கியத்துவமான இடங்களில் துருப்புகள் மேலதிகமாக குவிக்கப்பட்டுவருவதாகவும் படை நடவடிக்கைகள் மற்றும் பாதுகாப்பு நடவடிக்கை துரித கதியில் முடுக்கிவிடப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. க-சி

## வணிகர் கழகத்திற்கு வேண்டுகோள்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் உள்ள சகல வணிகர் கழகங்கள், வணிக மன்றங்களும் தற்போதைய இராணுவ நடவடிக்கையால் வலிகாமம் வடக்கு, வலிகாமம் மேற்குப் பகுதிகளில் இருந்து இடம் பெயர்ந்து அகதிகளாக வந்துள்ள எமது மக்களுக்கு உடனடியாக, தங்குமிடம், உணவு மற்றும் அத்தியாவசிய வசதிகள் ஏற்படுத்தி மனிதாபமான முறையில் இயன்றளவில் சிறந்த வசதிகள் ஏற்படுத்தி கொடுத்து பராமரிக்குமாறு யாழ் மாவட்ட வணிக கழகங்களின் இணையம் கேட்டுள்ளது. சி

## யாழ். ஆஸ்பத்திரிக்கு ஒரு மாதத்திற்கு தேவையான உணவுப் பொருள் விநியோகம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு ஒரு மாதகாலத்துக்கு தேவையான உணவுப் பொருள்களை யாழ். செயலக புனர்வாழ்வு பகுதியினர் வழங்கியுள்ளனர்.

தற்போதைய போர்க்கால சூழ்நிலையில் வைத்தியசாலை ஊழியர்கள் இரவு பகலையும் பார்க்காது தொடர்ந்து சேவையாற்றும் முகமாக ஊழியர்களுக்கு சமைத்த உணவை வழங்கும் முகமாக ஒரு மாதகால உணவுப்பொருள்களை வைத்தியசாலைக்கு யாழ், செயலகம் வழங்கியுள்ளது. 170-சி

## அழைப்பு

[மானிப்பாய்]

மானிப்பாய் ப. நோ. கூ. சங்க நெறியாளர், பொது முகாமையாளர் செயலாளர் ஏனைய பணியாளர் அனைவரையும் இன்று வியாழன் பிற்கபல் 2-00 மணிக்கு யாழ் ாமவட்ட கூட்டுறவுச்சபை மண்டபத்தில் ஒன்றுகூடுமாறு அதன் தலைவர் கேட்டுள்ளார். -71

## வலிகாமம் பகுதியில் ப. நோ. கூ. சங்கங்கள் இயங்கவில்லை

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் மேற்கு வடக்கு பகுதியில் உள்ள பலநோக்கு கூட்டுறவு சங்க கிளைகள் இயங்காது பாதிக்கப்பட்டுள்ளன.

இப்பகுதிகளில் இருந்து மக்கள் இடம்பெயர்ந்திருப்பதும், இப்பகுதிகளை நோக்கி இராணுவத்தினர் ஷெல் மற்றும் விமானக் குண்டு வீச்சு தாக்குதல்களை நடத்தி வருவதாலும் சங்கங்களின் சேவைகள் பாதிக்கப்பட்டுள்ளன. 170-சி


# அறிவித்தல்

பாடசாலை

மதிய உணவு முத்திரைக்கான

விநியோகம்

வேலணை ப. நோ. கூ. சங்க எல்லைக்குட்பட்ட பாடசாலை மதிய உணவு முத்திரைக்குரிய பொருட்களைப் பெற்றுக்கொள்ளும் பாவனையாளர்கள் 13 - 07 - 95ம் திகதி தொடக்கம் ஆடி மாதத்துக்குரிய பொருட்களைத் தாமதமின்றி உடன் பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்

நன்றி

பொதுமுகாமையாளர்

வேலணை ப. நோ. கூ. சங்கம்.

(ஏ-5098]


## பொருட்களை பெறலாம்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் ப. நோ. கூ. சங்கத்தின் கிளை இல 10, 11, 14 ஆகியவை தற்காலிகமாக மூடப்பட்டுள்ளதால். இக்கிளைகளில் பங்கீட்டு அட்டையை வைத்திருப்போரில் இதுவரை பங்கீட்டுப் பொருட்களைப் பெறாதவர்கள், திருநெல்வேலியில் சங்கத் தலைமைக்காரியாலயம் அமைந்துள்ள இடத்தில் உள்ள கடையில் பொருட்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

## இடமாற்றம்

(மானிப்பாய்)

சங்கானை, பண்டத்தரிப்பு, மானிப்பாய் ப. நோ. கூ. சங்கங்கள் சகல பொருட்களையும் ஏற்றிக்கொண்டு யாழ் நகர்ப் பகுதியில் களஞ்சியப்படுத்தியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. 71


இடம் பெயர்ந்த பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் அங்கத்தவர், பணியாளருக்கான

# முக்கிய அறிவித்தல்

எமது பிரதேசத்தில் நடைபெற்ற இராணுவ நடவடிக்கையால் இடம்பெயர்ந்த வலிகாமம் பிரதேச அங்கத்துவ சங்கங்களினதும் கொத்தணியினதும் பணியாளர்கள் கோப்பாய் சங்கத்தில் சமூகமாக இருக்கும் தங்கள் பொது முகாமையாளர் ஊடாக, கோப்பாய் ப. தெ. வ. அ. கூ. சங்கத்தின் பொது முகாமையாளரின் இணைப்புடன் கீழ்வரும் நடவடிக்கைகளுக்காகத் தொடர்பு கொள்ளவும்.

கிளை முகாமையாளர்கள் தம் வசமுள்ள விற்பனைப் பணத்தைச் செலுத்துவதுடன், உரிய சங்கப் பற்றுச் சீட்டைப் பெற்றுக்கொள்ளவும்.

மேலும், சகல பணியாளர்களும் தாம் இடம் பெயர்ந்த இடங்களில் உள்ள அங்கத்தவர் தொடர்பான இடம் பெயர்ந்த. இறந்த, காயமுற்ற இராணுவ கட்டுப்பாட்டில் இருக்கும் பிரதேசத்தில் உள்ள அங்கத்தவர் பணியாளர் விபரங்களைத் திரட்டி ஒப்படைக்கவும்.

இடம் பெயர்ந்த அங்கத்தவர்கள் தங்கள் நிலைபரம் தொடர்பான தகவல்களை இப்போது தாங்கள் தங்கியுள்ள பிரதேசத்தில் உள்ள எமது அங்கத்துவ ப. தெ. வ. அ. கூ. சங்கங்களிலும், கொத்தணிகளிலும் ஒப்படைக்கவும்.

நன்றி

தலைவர்

வட மாகாண ப. தெ. வ. அ. கூ. ச. சமாசம்

[ஏ-5099]

### மணிவாக்கு

குற்றங்களும் பாவங்களும் அற்றுப்போய்விட்டால், மனிதனுக்கு அனுபவங்கள் இல்லாமல் போய்விடுகின்றன. அனுபவம் இல்லையென்றால் நன்மை தீமைகளைக் கண்டுபிடிக்கமுடியாது ஆகவே தவறுகளின் மூலமே மனிதன் உண்மையை உணர்ந்துகொள்ள வேண்டும்.

— கண்ணதாசன்.

## நமது நோக்கு

### உண்மை மறைக்கப்படுகிறது

சிறிலங்கா அரசு குதித்து 'முன்னேறுதல் இராணுவ நடவடிக்கை மூலம் பன்னிரண்டு ஆண்டுகளாக தொடர்ந்து வரும் ஆயுதப்போரை ஒரு முடிவுக்கு கொண்டு வரும் தீர்வை கொண்டுவரமுடியாது. ஆகவே போர்வழி முறைகளை விட்டுவிட்டு சமாதானத்துக்கான பேச்சுக்களில் இறங்கவேண்டும், இவ்வாறு கனேடிய அரசின் வெளிவிவகார அமைச்சர் கூறியுள்ளார், அதுவுமல்லாமல் தமது நாடு சமாதானப் பேச்சுக்களை தீவிரப்படுத்த முன்னர் தயாராக இருந்ததையும் அவர் சுட்டிக்காட்டியுமுள்ளார். சிறிலங்கா அரசு தனது இன அழிப்பு யுத்தத்தை உலக நாடுகள் வெறுமனே பார்த்துக்கொண்டிருக்கும் என்று கருதினால் அது ஒரு தப்புக்கணக்காகத்தான் இருக்கும்.

அநுருத்த ரத்வத்த களத்தில் நின்றால் என்ன நிற்காவிட்டால் என்ன யுத்த மூலோபாயத்தை வெளிநாட்டு இராணுவ நிபுணர்களே வழிநடத்துகிறார்கள். ஆனால் அவரது வாயில் வருவது முழுப் பொய். வலிமேற்குப் பகுதி மீது நேற்று முன்தினம் மாலை 3-00 மணி முதல் மாலை ஆறு மணிவரை உக்கிர வான் தாக்குதல் நடத்தப்பட்டது. புக்காரா, சுப்பசொனிக் விமானங்கள் பெருமளவு குண்டுகளை வீசித் தள்ளின. தொல்புரம் பகுதியில் இடம்பெற்ற விமானக் குண்டு வீச்சில் ஒருவர் பலியானார். மூவர் படுகாயம் அடைந்தனர். அப்படியிருக்க பிரதி அமைச்சர் நேற்றுமுன் தினம் யாழ். குடாநாட்டில் விமானப் படை விமானங்கள் தாக்குதல் எதையும் நடத்தவில்லை என்று முழுப் பூசனிக்காயை சோற்றுக்குள் மறைக்கப் பார்க்கிறார். அவரது கூற்றை செய்தி ஸ்தாபனங்களும் நம்புகின்றனபோலவும் தெரிகிறது. புக்காரா குண்டுவீச்சு விமானம் நேற்றும் குண்டுகளைப் பொழிந்து தள்ளியது. நவாலித் தேவாலயத்தில் மக்களைப் பாதுகாப்புக்கு போயிருக்குமாறு பணித்துவிட்டு ஒரேதடவையில் பல குண்டுகளை வீசி நூற்றுக்கணக்கானோரை இனக்கொலை செய்தமையும் அரசு தற்செயலாக நடந்ததெனக் கூறி மறைக்கப் பார்க்கிறது. ஆனால் சர்வதேச செஞ்சிலுவைச் சங்க பிரதிநிதிகள் இராணுவத்தினர் நடத்திய குண்டுத் தாக்குதல்களாலேயே இந்த அனர்த்தங்கள் ஏற்பட்டது எனக் கூறுகிறார்கள் உண்மைகளை மறைப்பதற்கு எவ்வளவு முயன்றாலும் அது எப்படியும் வெளிவரத்தான் செய்யும்.

யுத்தம் புலிகளுக்கு எதிராகவே ஒழிய தமிழ் மக்களுக்கு எதிராக நடத்தப்படவில்லை என்று கூறும் அரசு எறிகணைத் தாக்குதல்களை மக்கள் செறிந்து வாழும் குடியிருப்புகள் மீது ஏன் ஏவுகின்றது? இறந்தவர்கள், காயமுற்றோர்களில் பெருந்தொகையினர் அப்பாவிப் பொதுமக்கள் என்பதை அரசு கவனத்துக்கு எடுக்கவில்லை. பேச்சளவில் தேவாலய தாக்குதல் பற்றி விசாரணை நடாத்துமாறு சந்திரிகா உத்தரவிட்டுள்ளாராம். குற்றவாளியையே தனக்கெதிரான வழக்கை விசாரிக்கச் சொல்வது போன்றதே இவ் உத்தரவாகும். இராணுவத்தினர் தாம் செய்த குற்றத்தை ஒத்துக்கொள்வார்களா? கன்னத்தில் அறைந்துவிட்டு ''சொறி'' மன்னிக்க வேண்டும் என்று கூறுவது போன்ற செயலே இதுவாகும்.

# நவாலியில் தேவாலயம் மீது தாக்குதல் வேண்டுமென்றே நடத்தப்பட்டது

## சந்திரிகாவுக்கு அவசர கடிதம்

(யாழ்ப்பாணம்)

நவாலி சென். பீற்றேஸ் தேவாலயத்தில் தங்கியிருந்த அப்பாவிப் பொதுமக்கள் மீதான விமானக்குண்டு வீச்சுத் தாக்குதலை வெகுவாகக் கண்டிக்கிறோமென நவாலி சென் பீற்றேஸ் தேவாலய குருவானவர் ஜனாதிபதி சந்திரிகாவுக்கு ஆட்சேபனைக் கடிதத்தை யாழ். அரசாங்க அதிபர்மூலம் அனுப்பி வைத்துள்ளார்.

அக்கடிதத்தில் மேலும்கூறப்பட்டுள்ளதாவது:

கடந்த 9ம் திகதி ஞாயிற்றுக்கிழமை இத்தேவாலயத்தில் விமானப்படையினர் மேற்கொண்ட தாக்குதலில் மாத்திரம் 65 அப்பாவிப் பொது மக்கள் உடல் சிதறுண்டு பலியாகியும் 150 பேர் படுகாயமடைந்துமுள்ளனர்.

அரசாங்க அறிவித்தலுக்கிணங்க போர் நடைபெறும் இடத்திலிருந்து விலகி தேவாலயத்தில் தஞ்சமடைந்த மக்கள்மீது இத்தாக்குதல் நடைபெற்றுள்ளது. தஞ்சமடைந்திருந்தமக்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்ட இச்செயல் தவறுதலாக நடந்தது என்று கூறமுடியாது. வேண்டுமென்றே குறிவைத்துத் தாக்கப்பட்டதாகக் கருதப்படுகிறது. தேவாலயம் விமான ஓட்டிக்கு தெளிவாகத் தென்படும் நிலையில் இருப்பதால் இது தவறுதல் என்று சொல்லுவதற்கு இடமில்லை.

இப்படியான கொடூரமான தாக்குதலை கண்டிப்பதோடு தங்களின் கீழுள்ள பாதுகாப்புப்படையினர் மீண்டும் இப்படியாக பொதுமக்கள் மீதான கண்மூடித்தனமான விமானத் தாக்குதல், ஷெல் தாக்குதல்களை நடத்தாதிருக்கும்படி அறிவுறுத்துமாறு கேட்டுக்கொள்கிறோம் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. 162-சி

# தென்மராட்சி நோக்கி மக்கள் ஆயிரக்கணக்கில் இடம்பெயர்வு

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் பகுதியிலிருந்து இராணுவ நடவடிக்கைகளினால் வெளியேறியோரில் கணிசமான தொகையினர் தென்மராட்சிப் பகுதியிலுள்ள பாடசாலைகளிலும், ஆலயங்களிலும், தனியார் வீடுகளிலும் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

தென்மராட்சியில் மட்டுவில் மகா வித்தியாலயம், சாவகச்சேரி மகளிர் கல்லூரி, சாவகச்சேரி இந்துக்கல்லூரி, சரசாலை கமலாசனி வித்தியாலயம், வரணி மகா வித்தியாலயம், கொடிகாமம் திருநாவுக்கரசு வித்தியாலயம், மிருசுவில் றோமன் தமிழ்க்கலவன் பாடசாலை உள்ளிட்ட பல பாடசாலைகளிலும் மிருசுவில் புனித நீக்கலார் ஆலயம் மற்றும் தனியார் வீடுகள் பலவற்றிலும் இடம் பெயர்ந்தோர் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

இடம் பெயர்ந்து வருவோரை பாடசாலைகளுக்கு ஏற்றிச் செல்வதற்கென நாவற்குழி சந்தியிலிருந்து கடந்த இரு தினங்களாக வாகன வசதி செய்யப்பட்டிருந்தது.

இடம் பெயர்ந்தோர்க்கான நிவாரணத்தை துரிதப்படுத்தும் வகையில் கிராமசேவையாளர்களின் மூலம் தென்மராட்சி பிரதேச செயலர் அலுவலகம் விபரங்களைச் சேகரித்து வருகின்றது. கி-சி

# தொடர்ச்சியான ஷெல் வீச்சால் தினமும் பலர் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் பகுதிகளை நோக்கி இராணுவத்தினர் தொடர்ச்சியான ஷெல் தாக்குதலை மேற்கொண்டு வருகின்றனர்.

இதேவேளை காரைநகர் கடற்பகுதியில் இருந்தும் கடற்படையினர் பீரங்கித் தாக்குதலை மேற்கொண்டு வருகின்றனர்.

இராணுவத்தினர் மக்கள் குடியிருப்புக்கள்மீது மேற்கொண்டுவரும் மும்முனைத் தாக்குதலினால் நேற்று முன்தினம் பொதுமக்கள் பலர் படுகாயமடைந்தனர்.

ஷெல் தாக்குதலுக்கு இலக்காகி வி. பொன்னம்பலம் வயது 84, மாவடிவீதி, மூளாய், எஸ் புவனேஸ்வரி, வயது 68, சுன்னாகம், ரி. வனிதா, வயது 32, சங்கானை, ஏ. தேவப்பிரியா, வயது 11, வட்டுக்கோட்டை, எஸ். சிவானந்தன் வயது 17, மானிப்பாய், பீ. யோகவேல் வயது9, சுழிபுரம், எஸ். சந்தசாமி, வயது 60, வட்டுக்கோட்டை, வி. அற்புதரத்தினம் வயது23, சண்டிலிப்பாய், எஸ். தர்மலிங்கம், வயது 62, மானிப்பாய், கே. புஸ்பராணி, வயது24, வட்டுக்கோட்டை ஆகியோர்யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிப்பட்டுள்ளனர்.

இராணுவத்தினர் அராலி, நவாலி, வட்டுக்கோட்டை, மானிப்பாய், சங்கரத்தை, சண்டிலிப்பாய் ஆகிய பகுதிகளை நோக்கி தொடர்ச்சியான ஷெல் தாக்குதலை மேற்கொண்டு வருகின்றனர். -170-சி

# புக்காராத் தாக்குதல் தொடர்கிறது பெருமளவு மக்கள் உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)

புக்காரா குண்டு வீச்சு விமானம் வலிகாமம் பகுதிகளில் கண்மூடித்தனமாக குண்டுவீச்சு தாக்குதல்களை மேற்கொண்டு வருகிறது.

மக்கள் குடியிருப்பு பகுதிகள் மீது மேற்கொள்ளப்பட்டு வரும் குண்டு வீச்சு தாக்குதலினால் மக்கள் உடைமைகள் சேதமடைந்துள்ளதோடு பொதுமக்கள் பலரும் கொல்லப்பட்டும் காயமடைந்தும் உள்ளனர்.

தொல்புரம், வழக்கம்பரை பகுதியில் நேற்று முன்தினம் நடைபெற்ற புக்காரா குண்டு வீச்சினால் சிலர் இறந்துள்ளனர். காயப்பட்டவர்கள் பலர் யாழ். ஆஸ்பத்திரிக்கு எடுத்துவரப்பட்டனர். வி ராஜ்மோகன், வயது 16, சங்கானை என்பவர் புக்காரா குண்டுவீச்சுக்கு இலக்காகிக் கொல்லப்பட்டார்.

இதைவிட என். புஷ்பராசா, வயது 43, தொல்புரம். இதே இடத்தைச் சேர்ந்த அருள்தாசன், வயது 20, கே சிவஞானவதி வயது 63 ஆகியோரே படுகாயமடைந்தனர்.

வலிமேற்கு பகுதியில் புக்காரா குண்டு வீச்சு தாக்குதலை மேற்கொண்டது. இத்தாக்குதலில் பி. மகேஸ்வரி, வயது 52, சங்கானை, ஐ. பவளம், வயது 70, சங்கானை, கே. தயானந்தன், வயது 16, சித்தன்கேணி, கே. தேவரஞ்சனி, வயது 17, சுழிபுரம், ப. மாயவன், வயது 32, சுழிபுரம் ஆகியோர் படுகாயமடைந்து யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். -170-சி

# தெற்கில் தாதிமார்களின் வேலைநிறுத்தம் முடிவுற்றது

(கொழும்பு)

ஒருவார காலமாக தொடர்ந்து வந்த தாதிமார் வேலை நிறுத்தம் முடிவுக்கு வந்துள்ளதாக கொழும்பு தகவல்கள் தெரிவிக்கின்றன.

தாதிமார் தாம் தங்குவதற்கு விடுதி வசதி செய்து தருமாறும் மற்றும் பல சலுகைகள் வழங்குமாறும் கோரி வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

தாதிமாரின் கோரிக்கைகள் இயன்றவரையில் நிறைவேற்ற சுகாதார அமைச்சர் ஏ. எச். எம். பௌஸி உறுதியளித்ததைத் தொடர்ந்து தாதிமார் வேலை நிறுத்தம் கைவிடப்பட்டுள்ளதாம்.

அரச ஐக்கிய தாதிமார் சேவைச் சங்கம் உட்பட பல தொழிற் சங்க அமைப்புக்கள் இவ் வேலை நிறுத்தப் போராட்டத்தில் முழு மூச்சுடன் ஈடுபட்டு வந்தது தெரிந்ததே. க-கி

## மா விநியோகம்

(யாழ்ப்பாணம்)

யாழ். செயலகம் கோதுமை மாவை மக்களுக்கு பங்கீட்டு அடிப்படையில் பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் விநியோகிப்பதற்கு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

பங்கீட்டு அட்டைக்கு ஐந்து கிலோ வீதம் மாவை உடனடியாக வழங்குவதற்கு செயலகம் நடவடிக்கைகளை எடுத்துள்ளது. 170-ரி

# ஆலயங்களில் தஞ்சமடைய மக்கள் தயக்கம்

(யாழ்ப்பாணம்)

நவாலி சென் பீற்றேஸ் தேவாலயம் புக்காரா குண்டு வீச்சுக்கிலக்கானதைத் தொடர்ந்து தேவாலயம், கோவில்களில் தஞ்சமடைவதற்கு அகதிகள் தயங்கி வருகின்றனர்.

அரசின் அறிவுறுத்தல்களுக்கு அமைவாக இடம் பெயர்ந்து மக்கள் கோவில்களிலும், தேவாலயங்களிலும் தஞ்சமடைந்திருந்த போதும் சென். பீற்றேஸ் தேவாலயம் குண்டு வீச்சுக்கு இலக்கானது. அதன் காரணமாகவே இடம் பெயர்ந்த மக்கள் கோவில்கள், தேவாலயங்களில் தஞ்சம் அடைவதற்கு அஞ்சுவதாக தெரிவிக்கப்படுகிறது. 162- சி

மரங்கள் வளர்வதனால் — மன உரமது வளர்கிறது

## இலங்கை கடற்படை தாக்குதலை கண்டித்து

# ராமேஸ்வரம் மீனவர் மறியல் நஷ்டஈடு தருமாறு கோரிக்கை

(சென்னை)

இலங்கை கடற்படையினரின் தாக்குதலைக் கண்டித்து இராமேஸ்வரம் மீனவர்கள் ரயில் மறியல் போராட்டமொன்றை நடாத்தியுள்ளனர்.

கடலுக்கு தொழிலுக்காக செல்லும் தமிழக மீனவர்கள் இலங்கை கடற்படையினரின் தாக்குதலுக்கு உள்ளாவதை உடன் தடுக்குமாறு இவர்கள் கோரியுள்ளனர்.

அத்துடன் இலங்கை கடற்படையினரால் பாதிப்புற்ற தமிழக மீனவ குடும்பத்தினருக்கு இலங்கை அரசிடம் இருந்து மத்திய அரசு நஷ்டஈடு பெற்றுத்தர வேண்டுமெனவும் இவர்கள் கோரியுள்ளனர்.

இராமேஸ்வரத்தில் நேற்று முன்தினம் நடாத்தப் பட்ட இந்த ரயில் மறிப்புப் போராட்டத்தில் ஆயிரக்கணக்கான மீனவர்கள் கலந்து கொண்டனர்.

அவர்கள் இலங்கை கடற்படையின் படுகொலைகளைக் கண்டிக்கும் சுலோகங்களை தாங்கியவண்ணம் போராட்டத்தை நடத்தினர். இப்போராட்டத்தினால் இராமேஸ்வரம் பகுதிக்கரையில் சேவைகள் பாதிப்புற்றன.

இதேவேளை இராமேஸ்வரம் மீனவர்களின்போராட்டத்தை தமிழக காங்கிரஸ் கட்சித்தலைவர் ஐ. குமரி ஆனந்தன் ஆதரித்துள்ளார்.

இலங்கை கடற்படைத் தாக்குதலில் இருந்து இந்திய மீனவரைக்காப்பாற்றுவதற்கு இந்தியக் கடற்படையினரின் ரோந்தை அதிகரிக்குமாறு குமரி ஆனந்தன் மத்திய அரசைக்கேட்டுள்ளார்.

இலங்கை கடற்படையினரின் தினசரித்தாக்குதல்களினால் பாதிக்கப்பட்ட தமிழக மீனவர்களுக்கு இலங்கைஅரசிடம் இருந்து நஷ்டஈட்டைப் பெற்று வழங்குமாறும் அவர் கோரியுள்ளார். கி-சி

# ஆயிரக்கணக்கான மக்கள் நேற்று முன்தினம் இடம்பெயர்வு

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் பகுதியில் தற்போது இடம் பெற்றுவரும் இராணுவ நடவடிக்கைகள் காரணமாக மக்கள் நாளுக்குநாள் பல்லாயிரக்கணக்கில் அகதிகளாக வெளியேறிக் கொண்டே இருக்கின்றனர்.

நேற்று முன்தினம் மூன்றுவது நாளாக இடம்பெற்ற நடவடிக்கைகளை அடுத்து யாழ். பொம்மைவெளி, அராலி, வட்டுக்கோட்டை, ஆனைக்கோட்டைப்பகுதிகளில் இருந்து பல ஆயிரக்கணக்கான மக்கள் மூட்டை முடிச்சுகளைச்சுமந்தவாறு, குழந்தைகள் சகிதம் நடந்து சென்றுகொண்டிருந்ததைக் காணக்கூடியதாக இருந்தது.

அகதிகள் பாடசாலைகள், ஆலயங்கள் நிரம்பி அவ்விடங்களில் தங்கமுடியாமல் மேலும் வெளியேறும் அகதிகள் அதிகரித்து வருவதாலும் மக்கள் வீதியோரங்களில் தங்குவதைக் காணக்கூடியதாக இருக்கிறது.

நல்லூர் கந்தசாமி ஆலயத்தில் அகதிகள் கூட்டம் அதிகரித்து ஆலய வீதிகளிலே எறிக்கும் வெயிலையும் பொருட்படுத்தாது தங்கியுள்ளனர்.

நகரின் நவீன மார்க்கட்டிலும் அகதிகள் நிரம்பி வழிகின்றன,

நேற்று முன்தினம் இரவு யாழ். நகர் பகுதியில் இடம்பெற்ற ஷெல் தாக்குதல்களினால் கொட்டடிப்பகுதி மக்கள் இரவு வெளியேறி மார்க்கட்பகுதியில் தங்கி வருகின்றனர்.

இச்சம்பவத்தில் அகதிகளாக வெளியேறும் மக்களில் பலர் தென்மராட்சிப்பகுதிகளையே நாடிச்செல்வதைக் காணக்கூடியதாக இருக்கின்றது. 90.ரி

## அகதிகளுக்கு உதவுங்கள்

(யாழ்ப்பாணம்)

இந்து இளைஞர் மன்றங்கள், இந்து சமய நிறுவனங்கள் யாவும் தமது சூழலில் உள்ள கோயில்கள் ஊடாக ஒன்று கூடி பொது மக்களின் இடர் நீங்கவும் சேவை விரிவாகவும் பிரதேச சபைகள் தோறும் சேவை செய்துவரும்பொது நிறுவனங்களுடன் இணைந்து தொழிற்படுவதுடன், தம்மால் வழங்கப்படும் சேவைகளின் விபரங்களையும், இந்து இளைஞர் பேரவையின் பதிவுக்கு அனுப்பிவைப்பதுடன், பூசைவழிபாடுகள் தடைப்படும் கோயில் விபரங்களையும் தருமாறு கேட்டுள்ளது. சி-

# இராசி பலன்

**13-07-1995**

வியாழக்கிழமை

[தமிழுக்கு ஆனி-29]

பிரதமை பி. ப. 2-53 வரை, உத்தராடம் பி. ப. 5-30வரை, இராகுகாலம் பகல் 1-59 முதல் 2-59 வரை சுபநேரம் காலை 7-29 முதல் 8-59 வரை, சித்தயோகம்.

மேடம்- பலரின் பாராட்டு, தொழில் மேன்மை, தியாகம்.

இடபம்- இனசன விரோதம். தடுமாற்றம், குடும்பச் செலவு.

மிதுனம்- மனத்துயரம். வேண்டாத உறவு, அலைச்சல்,

கடகம்- வாக்குவன்மை, தெய்வீக செலவு, மனமாற்றம்.

சிங்கம்- தொழில் லாபம், பயனுள்ள செயல், குடும்ப சுகம்.

கன்னி- தொழில் பகை, அந்நியர் கவலை, பணமுடை.

துலாம் எதிர்பாராத அவமானம், பெண் கோபம், மனக் கவலை.

விருச்சிகம்- காரிய பலிதம், விருந்தோம்பல், அகங்காரம்.

தனுசு- தன்நிலை மறத்தல், வழித்தொல்லை, குழம்பித் தெழிதல்.

மகரம்- கலந்துரையாடல், முயற்சி சாதனை, பணவரவு.

கும்பம்- தப்பபிப்பிராயம், துணிச்சலின்மை, வேற்றுமை.

மீனம்- தெய்வீக செயல், நண்பருதவி, கற்பனை.

— ஜோஸ்யர்

## இடம்பெயர்ந்தவர்களுக்கு

# ஒரு வார காலத்திற்கு நிவாரணம் வழங்கமுடிவு

[யாழ்ப்பாணம்]

வலி வடக்கு, மேற்கு பகுதிகளில் இருந்து இடம்பெயர்ந்த மக்களுக்கு ஒருவாரகால நிவாரணத்தை வழங்குவதற்கு யாழ். செயலகம் முடிவுசெய்துள்ளது.

பிரதேச செயலகங்கள்மூலம் இவ்நிவாரணத்தை துரித கதியில் பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் இடம்பெயர்ந்த மக்களுக்கு வழங்குவதற்கான நடவடிக்கைகளை யாழ். செயலகம் மேற்கொண்டுள்ளது. 170-சி

# பங்கீட்டு அட்டைக்கு பொருட்கள் விநியோகம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் பலநோக்கு கூட்டுறவுச்சங்கம் மக்களுக்கு பங்கீட்டு அட்டைக்கு பொருள்களை விநியோகித்து வருகின்றது

தற்போதைய போர்க்கால சூழ்நிலையை கருத்தில்கொண்டு கையிருப்பில் இருக்கும் பொருள்களை மேற்படி சங்கம் மக்களுக்கு வழங்கிவருகின்றது.

அரிசி, மா, சீனி பருப்பு, பால்மா போன்ற பொருள்கள் பங்கீட்டு அடிப்படையில் வழங்கப்பட்டுவருகின்றன. 170-சி

# யாழ், செயலக தொலைபேசி இணைப்புத் துண்டிப்பு

[யாழ்ப்பாணம்]

பலாலி இராணுவத்தினர் யாழ். செயலக தொலைபேசி இணைப்பைத் துண்டித்துள்ளனர்.

கடந்த மூன்று நாட்களாக தொலைபேசி சேவை துண்டிக்கப்பட்டுள்ளது.

தொலைபேசி இணைப்பு துண்டிக்கப்பட்டதை அடுத்துயாழ். அரசாங்க அதிபர் கொழும்புடன் நேரடியாக தொடர்பு கொள்ளமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது. [170-சி]

# அகதிகளிடம் திருட முயன்றவர் பிடிபட்டார்

[யாழ்ப்பாணம்]

அகதியாக வெளியேறி தஞ்சமடைந்திருந்த இடத்தில் இரவு படுத்திருந்த வேளை திருட்டுத் தொழிலில் இறங்க முற்பட்ட ஒருவர் வகையாகப் பிடிபட்டு காவல்துறையினரிடம் ஒப்படைக்கப்பட்டார்,

நேற்று முன்தினம் அதிகாலை 12-30மணிக்குயாழ் நகர் நவீன மார்க்கட்டிலேயே இச்சம்பவம் இடம்பெற்றது.

அகதிகள் ஆழ்ந்த நித்திரையில் இருந்த வேளை அங்கு சென்ற திருடன் ஒருவன் படுத்திருந்த இளம்பெண் ஒருவரின் சங்கிலியை அறுக்க முற்பட்ட போது அப்பெண் அருகில்படுத்திருந்த தாயை எழுப்ப, கண்விழித்த தாய் திருடனைக்கண்டு அஞ்சாது எட்டிப்பிடித்து சத்தம் போட்டதை அடுத்து நித்திரையில்இருந்த ஏனையமக்கள் திருடனைப் பிடித்து உடனடியாகவேகாவல்துறையினரிடம் ஒப்படைத்தனர். [90-சி]

# ஏவுகணை எதிர்ப்பு விமானங்கள் கொழும்பு வந்து சேர்ந்தன

(கொழும்பு)

இராணுவத்தினருக்குத் தேவையான பெருமளவு போர்த்தளபாடங்கள் கொழும்பு வந்து சேர்ந்துள்ளன.

டாங்கிகள், வெடிமருந்துகள், நவீனரக ஆயுதங்கள், தோட்டாக்களும், இரண்டு ஏவுகணை எதிர்ப்பு விமானங்களும் கொழும்புக்கு வந்துள்ளன. மேலும் மூன்றுஏவுகணை எதிர்ப்பு விமானங்கள் அடுத்த சில வாரங்களில் வரவுள்ளன.

இதைவிட கடற்படையினருக்கு தேவையான பல டோரா ரக பீரங்கிப் படகுகளும், சிறியரக விசைப்படகுகளும் வந்து சேர்ந்துள்ளதாக இராணுவ வட்டாரங்கள் தெரிவித்தன

இந்த போர்த்தளபாடங்களும் தற்போது யாழ். குடாவில் ஆரம்பிக்கப்பட்டுள்ள இராணுவ நடவடிக்கையில் பயன்படுத்தப் படவுள்ளதாகவும் கூறப்படுகிறது.

இப்போர்த்தளபாடங்களில் ஒரு பகுதி பலாலி தளத்திற்கு கொண்டு வரப்பட்டுள்ளன. ஏற்கனவே இங்கு வந்து சேர்ந்த படையினர் நவீனபோர்த்தளபாடங்களையே பயன்படுத்துவார்களெனவும் இராணுவ வட்டாரங்கள் தெரிவித்தன. -சி

# நவாலிக் கிராமம் சூனியப் பிரதேசமாகியது

(மானிப்பாய்]

நவாலிக் கிராமம் யாருமற்ற சூனியப் பிரதேசமாக காட்சியளிக்கின்றது.

கடந்த 10ந் திகதி மேற்கொள்ளப்பட்ட புக்காரா தாக்குதலினால் பலர் உடல் சிதறிப் பலியானதைத் தொடர்ந்து சகல மக்களும் இடம் பெயர்ந்துள்ளனர் பத்துக்கு [10] மேற்பட்ட வீடுகள் பலத்த சேதத்துக்குள்ளாகியதுடன் அந்த இடிபாடுகளுக்குள்ளிருந்து துர்நாற்றம் வீசியபடியுள்ளது. இவற்றுக்குள் மேலும் பல சடலங்கள் இருக்கலாமென்று நம்பப்படுகிறது.

சம்பவம் இடம் பெற்ற பிரதான வீதிகளில் இரத்த வெள்ளம் உறைந்து இருப்பதுடன் இரத்தக்கறையுடன் துணிகள் தலைமயிர்கள் சுருண்ட நிலையில் சைக்கிள் மின்கேபிள்கள், மரக்கொப்புகள், கற்குவியல்கள் என்பன காணப்படுகின்றன. 71-சி

# யுத்தம் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும்

[லண்டன்]

உடனடியாக யுத்தத்தை நிறுத்தி, விடுதலைப் புலிகளையும் ஒரு பகுதியாகச் சேர்த்து, மீண்டும் பேச்சுவார்த்தைகள் இருபக்கமும் சமநிலையில் இருப்பதாகக்கருதி பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கவேண்டும்என்று லண்டன் லூஷியன்நகரமேயர் சின்னமணி பி.பி.ஸி.க்குவழங்கியபேட்டியில் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்; இந்தக் கருத்தை அண்மையில் சந்தித்த இலங்கை நாடாளுமன்ற உறுப்பினர் அனுரா பண்டாரநாயக்காவிடமும் வலியுறுத்திஇருக்கின்றேன் என்றார்.

இதேவேளை வடக்கில் படையினர்தற்போது மேற்கொண்டு வரும் பாரிய இராணுவ நடவடிக்கை குறித்தும் பலபொது அமைப்புகள் கவலை தெரிவித்துள்ளன. [ம-ரி-சி]

# தீவுப் பகுதியிலும் படையினர் குவிப்பு

[கொழும்பு[

யாழ். குடாவில் தற்போது மேற்கொள்ளப்பட்டு வரும் இராணுவ நடவடிக்கைக்காக தீவுப்பகுதிகளிலும் பெருமளவு படையினர் குவிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. திருகோணமலையிலிருந்துஇவர்கள் கொண்டுவரப்பட்டுள்ளனர்.

இம்முறை கைப்பற்றப்படும் இடங்களில் நிரந்தர இராணுவ முகாம்கள் அமைக்கப்படவுள்ளதாம். இதற்காக முகாம்களை அமைப்பதற்குத் தேவையான பொருட்கள், உபகரணங்கள், கனரக வாகனங்கள் என்பனவும் ஏற்கனவே கப்பல்களின் மூலமாக வடபகுதிக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

இதேவேளை பொலிஸார் பலரும் கப்பல் மூலம் பலாலிக்குக் கொண்டுவரப்பட்டுள்ளனராம். [சி]

# கரையோர மக்களும் இரவில் இடம்பெயர்வு

(யாழப்பாணம்)

கரையோர பகுதி மக்களும் இரவு நேரங்களில் இடம் பெயர்ந்து பாதுகாப்பான இடங்களில் தஞ்சமடைகின்றனர்.

நேற்று முன்தினம் மண்டைதீவு இராணுவத்தினர் கரையோர பகுதிகளை நோக்கி ஷெல் தாக்குதலை மேற்கொண்டு வருவதை அடுத்து கரையோர பகுதி மக்களும் இடம்பெயர்ந்து வருகின்றனர்.

இடம் பெயரும் மக்கள் மணிப்புரி, அரியாலை, நாவற்குழி பகுதிகளை நோக்கி சென்றனர். 170- சி

★ வலிகாமம் மேற்குப் பகுதியில்

# வீதிகள், வீட்டு வளவுகளில் சடலங்கள் சிதறிக் கிடக்கின்றன

[யாழ்ப்பாணம்]

வலி மேற்குப் பகுதிகளில் இராணுவத்தாக்குதல்களினால் பலியான பொதுமக்களின் பல சடலங்கள் ஆங்காங்கேசிதறிக் கிடப்பதாக அங்கிருந்து வருவோர் தெரிவிக்கின்றனர்.

விமானக் குண்டு வீச்சுக்களினாலும், ஷெல் தாக்குதல்களினாலும் பலியான பல பொதுமககளின் சடலங்கள் அப்புறப்படுத்தமுடியாதநிலையில் வளவுகளிலும் வீதிகளிலும் கிடப்பதாகவும், காயமடைந்தபொது மக்கள் பலர் வைத்திய வசதிகளின்றி அப்பகுதிகளில் தவிப்பதாகவும் கூறப்படுகின்றது.

சடலங்கள் அப்புறப்படுத்தப்படாத நிலையில் பல பகுதிகளிலும்பிணவாடை வீசுகின்றது. கால்நடைகளும் நூற்றுக்கணக்கில் ஆங்காங்கே இறந்துகிடக்கின்றன. [வி-சி]

## ரஷ்ய அதிபருக்கு இருதய நோய்

(மொஸ்கோ]

ரஷ்ய அதிபர் பொறிஸ் ஜெல்ஸ்வின் இருதயநோய் காரணமாக மருத்துவமனை ஒன்றில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக ரஷ்யசெய்திஸ்தாபனங்கள் தெரிவித்துள்ளன.

எனினும் அவருடைய உடல் நிலைதிருப்திகரமாக உள்ளதாகவும் உயிருக்கு எதுவித ஆபத்து இல்லை என்றும் அச்செய்திஸ்தாபனங்கள் மேலும் தெரிவித்தன.

எனினும் ரஷ்ய அதிபர் அடுத்த வருடம் இடம்பெறவுள்ள பொதுத்தேர்தல் வரைதாக்குப் பிடிப்பாரா என்பது குறித்து பலத்த சந்தேகம் எழுந்துள்ளதாக ரஷ்ய அரசியல் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. க-சி

★ இடவசதியில்லை

## கோப்பாய் ஆஸ்பத்திரிக்கு நோயாளர் இடமாற்றம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்ற நோயாளர்களில் இருபது பேர் முதற்கட்டமாக கோப்பாய் அரசினர் வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

ஷெல், குண்டு வீச்சுகளுக்கு இலக்காகி காயமடைந்து சிகிச்சை பெறுபவர்களின் எண்ணிக்கை வைத்தியசாலையில் அதிகரித்ததைத் தொடர்ந்து வைத்தியசாலையில் இடநெருக்கடி ஏற்பட்டுள்ளது.

இதனை தொடர்ந்து ஒரு பகுதி நோயாளர்கள் கோப்பாய் ஆஸ்பத்திரிக்கு மாற்றப்பட்டுள்ளனர். 170- சி

## வீடுகளிலிருந்து சடலங்கள் மீட்பு

(மானிப்பாய்)

நவாலியில் புக்காரா நடாத்திய தாக்குதலினால் நவாலியை சேர்ந்தவரும் மருதனார்மடம் கல்விக்கோட்டத்தில் பணிபுரிபவருமாகிய வைத்திலிங்கம் இராசலிங்கம் அல்லது இராசு (வயது 54) அவரது வீட்டில் இறந்து கிடந்ததை செவ்வாய்கிழமை கண்டுபிடிக்கப்பட்டது.

இத்தாக்குதலின் போது இவரது வீடும் பலத்த சேதத்திற்குள்ளாகியது.

இதேவேளை கடந்த ஞாயிறு நவாலி சென்.பீற்றர்ஸ் தேவாலயத்தின் மீது நடத்தப்பட்ட தாக்குதலின் போது இவரது சகோதரியும் யாழ்ப்பாணம் டனே அபிவிருத்திச்சபையில் பணிபுரிபவருமான கணேசலிங்கம் கமலாதேவி (வயது 45) இவரது மைத்துணி கமலநாதன் சாவித்திரி வயது 40) ஆகியோர் கொல்லப்பட்டது குறிப்பிடத்தக்கது. 71-சி

## வர்த்தக நிலையங்களை திறக்க கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

பெரும்பாலான வர்த்தக நிலையங்கள் திறக்கப்படாமல் இருப்பதால் பொதுமக்கள் அத்தியாவசியப் பொருட்களைப் பெறுவதில் பெரும் நெருக்கடிகளை எதிர் நோக்கியுள்ளனர். இக்கட்டான இவ்வேளையில் வர்த்தக நிலையங்களைத் திறந்து பொதுமககளுக்கு ஒத்துழைப்பை வழங்குமாறு தமிழர் புனர்வாழ்வுக் கழகம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

மூன்று இலட்சத்துக்கும் மேற்பட்ட மக்கள் இடம் பெயர்ந்து இருப்பதால் இவர்கள் தங்கியுள்ள இடம் பெயர்ந்தோர் முகாம்களில் அத்தியாவசியப் பொருட்களுக்குத் தட்டுப்பாடு நிலவுகிறது. பொதுமக்கள், சமூக நோக்குடைய நிறுவனங்கள் இடம் பெயர்ந்தோர்களுக்காக கொடுக்க விரும்பும் அன்பளிப்புக்களை கந்தர்மடம் அரசடி வீதியில் உள்ள தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தின் யாழ் மாவட்டம் செயலகத்தில் வழங்கி ஒத்துழைக்குமாறு தமிழர் புனர்வாழ்வுக் கழகம் வேண்டுகோள் விடுத்துள்ளது. ரி-சி

## மரத்தின் கீழ் நின்ற தம்பதிகள் மரம் முறிந்து வீழ்ந்து உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)

ஷெல் மற்றும் விமானக் குண்டுவீச்சுக்குஅஞ்சிபாதுகாப்பாக மரத்தின் கீழ் நின்ற தம்பதிகள் மரம்முறிந்து விழுந்து பரிதாபகரமாக மரணமான சம்பவம் கடந்த ஞாயிற்றுக்கிழமை மானிப்பாய் வடக்கு சங்குவேலிப் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

இப்பகுதிக்கு சென்ற மக்கள் மரத்தின் கீழ் இருவரின் சடலங்களும் இருந்ததை கண்டு சடலங்களை அங்கேயே அடக்கம் செய்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இறந்தவரினதும் அவரது மனைவியினதும் சடலங்கள் அடையாளம் காணப்பட்டன.

இறந்தவர் யாழ். இறைவரித் திணைக்கள ஊழியர் என்றும் தெரிவிக்கப்படுகிறது. 170-சி

## அகதி முகாம்களுக்கு அரச அதிபர் விஜயம்

(யாழ்ப்பாணம்]

கொழும்பில் இருந்து நேற்று யாழ்ப்பாணம் வந்த யாழ். அரசாங்க அதிபர் கே. பொன்னம்பலம் இடம் பெயர்ந்த அகதிமுகாம்களுக்கு நேற்று விஜயத்தை மேற்கொண்டார்.

முகாம்களில் தங்கியிருக்கும் மக்களை நேரில் பார்வையிட்ட அரசாங்க அதிபர் மக்களின் குறைகளையும் அறிந்து கொண்டனர்.

இதனைவிட அரச அதிபர் பிரதேச செயலாளர்களையும் சந்தித்து இடம்பெயரும் மக்களின் விடயம் பற்றி கலந்துரையாடினர் எனறு தெரிவிக்கப்பட்டது. 170-சி

## நேற்று

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கொல்லப்பட்டதாகவும், 175 பேர் படுகாயமடைந்ததாகவும் இராணுவத் தலைமையகம் நேற்று தெரிவித்தது. கி-சி

## தவறிவிட்டது

'ஈழநாடு' ஸ்தாபனத்தில் வேலை செய்யும் ஊழியர் அ. தேவராசாவின் அடையாள அட்டை, ஸ்தாபன அடையாள அட்டை, சிறுதொகைப் பணம் அடங்கிய 'கைபேஸ்' என்பன நேற்று முன்தினம் இரவு யாழ். நகரில் தவறவிடப்பட்டது கண்டெடுத்தவர்கள் தயவு செய்து 'ஈழநாடு' ஸ்தாபனத்தில் ஒப்படைக்கவும்.

## தேவாலய

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இந்த அறிக்கையைப் பெற்றுக் கொண்ட பாப்பரசர் இத்தாக்குதல் குறித்து அதிர்ச்சியும் ஆழ்ந்த கவலையும் தெரிவித்துள்ளார்.

பொதுமக்கள் மீதான விமானத் தாக்குதல்களை நிறுத்துமாறு ஆயர் தோமஸ் சௌந்தரநாயகம் ஜனாதிபதி சந்திரிகாவுக்கு அனுப்பிய கடிதத்தில் வலியுறுத்திக் கேட்டுள்ளார்.

சர்வதேச செஞ்சிலுவைச் சங்கமும், விமானப்படை இத்தேவாலயத்தின்மீது தாக்குதல் நடத்தியபோது கொல்லப்பட்ட 65 பேரில் 15 பேர் குழந்தைகள் என்ற தகவலையும் ஜெனிவாவிலுள்ள தலைமைச் செயலகத்துக்கு அனுப்பியுள்ளது.

இத்தாக்குதல் வேண்டுமென்றே திட்டமிட்டு நடாத்தப்பட்டிருப்பதாக ஆயர் தனது கடிதத்தில் குற்றஞ்சாட்டியுள்ளார். தீ சி

## அகதிகள்

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

கூடியதாக உள்ளது.

பெரிய மரங்களின் கீழும், வீதியோரங்களிலும், பஜார்களிலும் இவர்கள் தங்கியிருந்து தம்தேவைகளை ஒழுங்கான முறையில் பூர்த்திசெய்ய முடியாது படும் அவலங்களை எண்ணிக் கூடப் பார்க்க முடியாதளவு வேதனையை அளிப்பனவாக உள்ளன. 90-சி

## கோப்பாய் பகுதியிலும் அகதி முகாம்கள் அமைப்பு

(நல்லூர்)

வலிமேற்கு, வலிவடக்கு, வலிதெற்குப் பகுதிகளைச் சேர்ந்த பல்லாயிரக் கணக்கான மக்கள் கோப்பாய் பிரதேச செயலர் பிரிவில் உள்ள பாடசாலைகள், வீடுகள் தேவாலயங்களில் இடம் பெயர்ந்து தங்கியுள்ளனர்.

இப்பிரிவில் எட்டுப் பாடசாலைகளில் அகதிகள் தங்கியிருப்பதற்கு எட்டு முகாம்கள் கோப்பாய் பிரதேச செயலரால் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

இம் முகாம்களில் தங்கியிருப்பவர்களுக்கு சமைத்த உணவு வழங்கப்பட்டு வருகின்றது. இதற்கான ஒழுங்குகளை பிரதேச செயலர் பிரிவு றெட்பானா கோப்பாய் மக்கள் நலன் காக்கும் பிரிவினர் கூட்டாக செய்து ருகின்வறனர்.

கோப்பாய் ஆசிரிய கலாசாலை இருபாலை கந்த வேள் பாடசாலை, கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி கோப்பாய் சரவணபவானந்த வித்தியசாலை கோப்பாய் றோமன் கத்தோலிக்க பாடசாலை, அத்தியார் இந்துக்கல்லூரி உரும்பராய் இந்துக்கல்லூரி ஆகியனவற்றில் அகதிமுகாம்கள் அமைக்கப்பட்டுள்ளன.

இம் முகாம்களில் அகதிகள் தொகை அதிகரித்துள்ளது மேலும் பல பாடசாலைகளில் முகாம்கள் அமைக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. 95-சி

## நிவாரணம் வழங்கப்படுகிறது

(மானிப்பாய்)

காரைநகர் ப. நோ. கூ. சங்கம் இடம் பெயர்ந்தவர்களுக்கான முதலாம் கட்ட நிவாரணத்தை கடந்த திங்கள் முதல் வழங்குகின்றது. 71-கி

## இடமாற்றம்

[அரியாலை]

யாழ். ஆஸ்பத்திரி வீதியில் இயங்கிவந்த மலேரியா தடுப்பு இயக்க யாழ். பிராந்தியப் பணிமனை தற்பொழுது யாழ். விக்டோறியா வீதியில் [போதனா வைத்தியசாலை பின்புறம்] யாழ். பிராந்திய பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனைக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளதாக தெரியவருகின்றது. [59]

## ஷெல்

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

எம். கந்தசாமி வயது 48, தொல்புரம். கே. தாட்சாயனி வயது 05 ஆகியோர் படுகாயமடைந்து யாழ் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர், 170-சி

## பழுதடைந்த சடலங்களால் ஆஸ்பத்திரியில் துர்நாற்றம்

(யாழ்ப்பாணம்)

நவாலியில் இடம்பெற்ற புக்காரா குண்டு வீச்சால் உயிரிழந்து யாழ். போதனா வைத்தியசாலையில் இனம் காண்பதற்காக வைக்கப்பட்டிருக்கும் சடலங்கள் அழுகி பழுதடைந்திருப்பதால் சகித்துக்கொள்ள முடியாத துர்நாற்றம் வீசுகின்றது.

வைத்தியசாலைச் சுற்று வட்டாரமே இந்த துர்நாற்றத்தால் பெரும் பாதிப்படைந்துள்ளது.

பிரேத அறைப்பகுதியின் சுற்றுப்புறத்தில் நடமாடுபவர்கள் வயிற்றைக்குமட்டும் இத்துர்நாற்றத்தால் மூக்கைப் பிடித்தவாறே நடமாடுகின்றனர்.

சடலங்கள் பெருமளவு அப்புறப்படுத்தப்பட்டபோதிலும் துர்நாற்றம் சகிக்க முடியாமலே உள்ளது. 90-சி

## உலர் உணவு விநியோகம்

(அரியாலை)

வேலணை பலநோக்கு கூட்டுறவுச் சங்க நிவாரணக் கிளைகள் மூலம் தற்பொழுது வைகாசி மாத கடைசி இரு வாரங்களுக்கும் ஆனி மாத முதல் இரு வாரங்களுக்குமான நான்கு வார உலர் உணவுப் பொருட்கள் வழங்கப்பட்டு வருகின்றன, பாவனையாளர்கள் உடன் வந்து பெற்றுக்கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. -59


## த. பொ. மே. நிறுவன பணியாளர்கள் சந்திக்கவும்

த. பொ. மே. நிறுவனத்தில் பணிபுரியும் சகல பணியாளர்களும் த பொ மே. நிறுவனத்தின் யாழ். மாவட்ட செயலகத்தில் இன்று வியாழக்கிழமை காலை 9 00 மணியிலிருந்து தற்காலிகமாக இயங்கும் காரியாலயத்தில் சந்திக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்

த. பொ. மே. நிறுவனம்

[எ 5100]

# நிவாரணம் வழங்க துரித ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

வலிகாமத்திலிருந்து இடம் பெயர்ந்த மக்களுக்கு நிவாரணப் பணிகளை மேற்கொள்வதில் பிரதேச செயலகங்கள் ஈடுபட்டு வருகின்றன.

ஊரடங்குச்சட்டம் மற்றும் நேற்றையதினம் போயா விடுமுறை தினமாக இருந்த போதிலும் பிரதேச செயலகங்கள் இடம் பெயர்ந்த மக்களுக்கு நிவாரணம் வழங்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றன.

குறிப்பாக யாழ். பிரதேச செயலகத்திற்கு நேற்று ஊழியர்கள் சமூகம் கொடுக்காத பட்சத்திலும் பிரதேச செயலருடன் இரண்டு தொண்டர்கள் இணைந்து சேவையாற்றியதை காணமுடிந்தது. 170-சி

# தமிழகத்தில் கைக்குண்டு வீச்சு: பத்துப் பேர் உயிரிழப்பு

(சென்னை)

தமிழகம் வாழப்பாடியில் நேற்று முன்தினம் இரவு தேநீர் கடையொன்றின் மீது கைக்குண்டு ஒன்று வீசப்பட்டதில் அங்கிருந்த பத்துப் பேர் அவ்விடத்திலேயே உயிரிழந்தனர். பத்துப்பேர் படுகாயம் அடைந்தனர்.

வாகனமொன்றில் வந்த தேநீர் கடைக்கு அருகில் இருந்த பொலிஸ் நிலையத்தின் மீது வீசப்பட்ட குண்டே தவறுதலாக கடையின் மீது விழுந்து வெடித்தபோதே அங்கு இருந்த பத்துபேர் உயிரிழந்தனர்.

இனந்தெரியாத நபர்களே இந்த கைக்குண்டை வீசிவிட்டு தப்பிச் சென்றுவிட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

தமிழகத்தில் நடந்த ஒரு வாரத்தில் இடம்பெற்ற இரண்டாவது கைக்குண்டு வீச்சுச் சம்பவம் இதுவாகும். சி

# கலிபர் தாக்குதலில் சிறுமி படுகாயம்

(யாழ்ப்பாணம்)

இராணுவத்தினர் மேற்கொண்ட கலிபர் தாக்குதலுக்கிலக்காகி தொல்புரத்தைச் சேர்ந்த கந்தசாமி ஜீவமலர் (வயது 13) என்ற சிறுமி படுகாயமடைந்து யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நவலிப்பகுதியில் நேற்று முன்தினமிரவு மக்கள் இடம்பெயர்ந்து சென்றவேளை இராணுவத்தினரின் கலிபர்சன்னம் விழுந்ததில் மேற்படி சிறுமி முதுகில் படுகாயமடைந்தார். 170-சி

# காயமடைந்த பெருமளவு மக்கள் வெளியேற முடியாது தவிப்பு

(யாழ்ப்பாணம்)

வலிகாமம-மேற்குப் பகுதியில் நேற்று முன்தினம் மூன்றாவது நாளாக இடம்பெற்ற இராணுவ நடவடிக்கையின் போது காயமடைந்து வெளியேற வசதியற்ற நிலையில் பலர் பலத்த காயங்களுடன் வீடுகளில் அடைந்து கிடப்பதாக அங்கிருந்து வருபவர்களால் தெரிவிக்கப்பட்டது.

அவ்வாறு காயமடைந்து வர வசதியற்ற நிலையில் இருந்த மூவர் நேற்றும், நேற்றுமுன்தினமிரவும் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

நேற்றுமுன்தினம் மாலை வட்டுக்கோட்டைப் பகுதியிலுள்ள அகதிகள் முகாம் மீது மேற்கொள்ளப்பட்ட விமானத் தாக்குதலின் போது காயமடைந்த, காரைநகரிலிருந்து இடம்பெயர்ந்தவரான மயிலன் பொன்னுத்துரை (வயது-60) என்பவரும், வட்டுக்கோட்டையில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் காயமடைந்த இராசமணி (50-வயது) என்பவரும், வட்டுக்கோட்டை சங்கரத்தைப் பகுதியில் நேற்றுக்காலை 11 மணிக்கு இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் வடலியடைப்பைச் சேர்ந்த கந்தசாமி ஜீவமலர் (சாந்தி) (19-வயது) என்பவருமே நேற்று அனுமதிக்கப்பட்டவர்களாவர். -90-சி

# கிராமசேவையாளரிடம் பதிவு செய்யுங்கள்

(யாழ்ப்பாணம்)

இராணுவ நடவடிக்கைகளால் பாதிக்கப்பட்டு இடம் பெயர்ந்து வந்து யாழ் நகர்ப் பகுதிகளில் உறவினர்கள் வீடுகளில் தஞ்சமடைந்திருப்பவர்கள் தமது விபரங்களை அந்தந்தப்பகுதி கிராம சேவையாளர்களிடம் பதிவுசெய்து கொள்ளுமாறு யாழ் பிரதேச செயலாளர் கலாநிதி க. குணராசா தெரிவித்தார்.

யாழ். நகர்ப்பகுதியில் உறவினர் வீடுகளில் தஞ்சமடைந்திருப்பவர்கள் தமது குடும்பபதிவு அட்டையையும் தற்பொழுது தங்கியிருக்கும் வீட்டு உரிமையாளருடைய குடும்பப்பதிவு அட்டையையும் கிராமசேவையாளரிடம் பதிவு செய்வதற்காக எடுத்துச் செல்ல வேண்டுமென்றும் அவர்தெரிவித்தார். 162-சி

# உணவு முத்திரைக்கான பொருட்கள் விநியோகம்

(யாழ்ப்பாணம்)

இடம்பெயர்ந்த மக்களில் அகதி நிவாரண உணவு முத்திரை வைத்திருப்பவர்கள் த-24 புள்ளிக்கான உலர் உணவுப் பொருட்களை பெற்றுக் கொள்ளலாமென யாழ். பிரதேச செயலர் தெரிவித்துள்ளார்.

இடம் பெயர்ந்த மக்கள் தற்பொழுது தாங்கள் தங்கியிருக்கும் அந்தந்தப் பகுதிகளில் உள்ள கூட்டுறவுச் சங்கக் கிளைகளில் இம்முத்திரைக்கான உலர் உணவு பொருட்களான அரிசி, மா, சீனி, பருப்பு, பால்மா ஆகிய பொருட்களைப்பெற்றுக்கொள்ளலாம்.

வறுமை நிவாரண உணவு முத்திரைகள் வைத்திருப்பவர்கள் இது வரை புதிய உணவு முத்திரைகள் வழங்கப்படாதவர்களுக்கும் இடம்பெயர்ந்து வரும்போது தவறவிட்டவர்களுக்கும் ஒரு வாரத்துக்கான உலர் உணவுப் பொருட்கள் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் வழங்கப்பட்டு வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். -162-சி

# கடமைக்கு திரும்புங்கள்

[யாழ்ப்பாணம்]

இடம் பெயர்ந்த மக்களுக்கான உலர் உணவு விநியோக வேலைகளைப் பூர்த்தி செய்ய யாழ் பிரதேச செயலாளர் பணிமனை ஊழியர்கள் கடமைக்கு உடன சமூகமளிக்குமாறு யாழ். பிரதேச செயலாளர் கோருகிறார். -162-சி

# அதிபர்கள், ஆசிரியர்களுக்கான முக்கிய சந்திப்பு

(யாழ்ப்பாணம்)

இன்றைய நெருக்கடியில் அதிபர்கள், ஆசிரியர்கள், பாடசாலை மாணவர் தலைவர்கள் மேற்கொள்ள வேண்டிய அவசரநடவடிக்கைகள் சம்பந்தமான கூட்டம் கல்விக்கோட்டங்கள் ரீதியாக பின்வரும் திகதி அடிப்படையில் ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

இன்றுவியாழன் மு.ப. 9-00 மணிக்கு யாழ் நல்லூர், வேலணை ஊர்காவற்றுறைக் கோட்டம் யாழ். இந்துக் கல்லூரியிலும் காலை 11மணிக்கு உடுவில், கோப்பாய்கோட்டங்கள் நீர்வேலி அத்தியார் இந்துக்கல்லூரியிலும். பி. ப. 2 மணிக்கு கரவெட்டி, பருத்தித்துறை மருதங்கேணிக் கோட்டங்கள் நெல்லியடி ம. வி. யிலும், மாலை 4 மணிக்கு சாவகச்சேரிக் கல்விக் கோட்டம் சாவகச்சேரி டிறிபேக்கல்லூரியிலும் கூடுமாறு கேட்கப்பட்டுள்ளனர். -சி

# அதிபர் அழைப்பு

(யாழ்ப்பாணம்)

வயாவிளான் மத்திய மகா வித்தியாலய ஆசிரியர்களையும், உயர்தர வகுப்பு மாணவர்களையும் இன்று காலை 10 மணிக்குப் பாடசாலையில் தவறாது சமுகமளிக்கும்படி அதிபர் கேட்டுக்கொள்கிறார். -சி

# சாரணருக்கு அழைப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்ட சாரணர்கள், திரிசாரணர்கள் சாரண ஆசிரியர்களை பரியோவான் முதலுதவிப் படையினர் சாரணிய வழிகாட்டிகள் அனைவரையும் இன்று வியாழன் பிற்பகல் 2 மணிக்கு யாழ் இந்துக்கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் கூடுமாறு ஆணையாளர்கள் கேட்டுக் கொள்கின்றனர். சி

# ஷெல் தாக்குதல்

(யாழ்ப்பாணம்)

பலாலி இராணுவமுகாமிலிருந்து இராணுவத்தினர் நேற்று காலை குடியிருப்பு பகுதிகளை நோக்கி ஷெல் தாக்குதலை மேற்கொண்டனர்.

அளவெட்டி, மல்லாகம், தெல்லிப்பழை, உடுவில் போன்ற பகுதிகளில் ஷெல்கள் வீழ்ந்து வெடித்துள்ளன. 170-59 90-சி

# இராணுவ நடவடிக்கையால் தவறவிடப்பட்டவர்களின் விபரங்கள் பதிவு

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் பகுதியில் இராணுவத்தினர் மேற்கொண்ட பாரிய இராணுவநடவடிக்கையால் குடும்பத்தவர்கள் மற்றும் உறவினர்களை தவறவிட்ட நூற்றுக்கணக்கானோர் நேற்று சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் யாழ். வதிவிடப்பிரதிநிதியின் அலுவலகத்தில் பெருமளவில் கூடியிருந்தனர்.

இதையடுத்து சர்வதேச செஞ்சிலுவைச்சங்கம், தவறவிடப்பட்டவர்கள், காணாமற்போனவர்களின் விபரங்களை பதிவு செய்து வருகின்றது.

நேற்று வரை சுமார் 300 பேருக்கு மேல் வலிகாமத்தில் மேற்கொள்ளப்பட்ட இராணுவ நடவடிக்கையின்போது காணாமற்போனவர்களின் விபரங்கள் யாழ். சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தில் பதியப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. 170-சி

# உதவிகள் வழங்கலாம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் இடம் பெயர்ந்து துன்பப்படும் மக்களுக்கு உதவிசெய்ய விரும்புபவர்கள் பணமாகவோ, பொருளாகவோ கந்தர்மடம், அரசடி வீதியிலுள்ள தமிழர் புனர்வாழ்வுக் கழக மாவட்டச் செயலகத்தில் ஒப்படைக்கும்படி கேட்கப்படுகின்றனர். சி

# காயமடைந்தவர் மரணம்

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் பகுதியில் இராணுவத்தினர் நேற்று முன்தினம் மேற்கொண்ட ஷெல் தாக்குதலினால் படுகாயமடைந்து யாழ் போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த ஒருவர் நேற்று மரணமடைந்தார்.

வலிகாமம் மேற்கைச் சேர்ந்த ஜெயபாலன் (வயது 50) என்பவரே இறந்தவராவார். 170 சி

# இரு போராளிகள் வீரச்சாவு

[யாழ்ப்பாணம்]

வலி-மேற்கு பகுதியில் முன்னேற முயலும் படையினருடனான மோதலில் மேலும் இரு போராளிகள் வீரச்சாவு அடைந்துள்ளனர்.

பழனியாண்டி சந்திரமோகன்-கொழும்பு], கப்டன் நெடுஞ்செழியன் [துரைலிங்கம் சிவாகரன் - மட்டுவில் தெற்கு] ஆகியோரே வீரச்சாவடைந்தவர்களாவர். இவர்களுக்கு விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தை தெரிவித்துள்ளனர். -சி

## படையினரின்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

யுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. -சி

## பேராசிரியர்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

யப்பட்டுள்ளனர்.

தமிழ் மக்கள் அனைவரினதும் சகல நலன்களையும் பேணும் வகையில் ஒழுங்கு செய்யப்பட்டுள்ள இப்பிரஜைகள் குழு தற்போது குடாநாட்டில் மேற்கொள்ளப்பட்டு வரும் இராணுவ நடவடிக்கைளினால் ஏற்பட்டுள்ள சேதங்கள் பற்றி மதிப்பீடு செய்து வருவதுடன் இது தொடர்பாக சர்வதேச சமூகத்துக்கென அறிக்கை ஒன்றையும் தயார் செய்துவருகிறது.

நற்சமூக நடுநிலையத்தில் இயங்கத்தொடங்கியுள்ள இப்பிரஜைகள் குழுவின் காப்பாளர்களாக யாழ். ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம், முன்னாள் ஆயர் டீ. ஜே. அம்பலவாணர், நல்லை ஆதீன முதல்வர் பரமாச்சாரிய சுவாமிகள், சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி ஆகியோர் இயங்கி வருகின்றனர். -சி

## இராணுவ

(1ம் பக்கத் தொடர்ச்சி)

வடக்கு - கிழக்குப் பிராந்திய இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் ஹேமான் தஹுவத்த. யாழ். மாவட்ட கட்டளைப் பிரிவுத் தலைவர் மேஜர் ஜெனரல் சிசால் வீரசூரிய, கடற்படை அதிகாரி கொமடோர் அமரவீர ஆகியோர் வழி நடத்துவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. -சி

## புக்காரா

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தாக்குதலை மேற்கொண்டது.

விமானத்திலிருந்து மக்களை நோக்கியே வீசப்பட்ட இக்குண்டு வீச்சுத்தாக்குதலின் போது சரவணையிலிருந்து இடம்பெயர்ந்து கொட்டடிப் பகுதியில் வசிக்கும் குமாரசாமி பத்மநாதன் (வயது 24) என்பவரே உயிரிழந்தவராவார். படுகாயமடைந்த இவர் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சைக்குட்படுத்திய வேளையில் அங்கு மரணமானார்.

மற்றும் நல்லூரைச் சேர்ந்த சகாயராசா (17 வயது) யாழ்ப்பாணம் றக்கா வீதியைச் சேர்ந்த அருளப்புகுணம் (வயது 28) ஆகிய இருவரும் காயமடைந்து யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (170 90 சி)

இப்பதிரிகை "ஈழநாடு" லிமிட்டெட்டுக்காக யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி, 88ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1995ம் ஆண்டு ஜூலை மாதம் 13-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News paper at the General Post Office Sri Lanka under Licence number B/1683613.